# ஈரோடு மாநகராட்சி
# மாமன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்
## (திருவள்ளுவராண்டு 2042 ஆவணித் திங்கள் 15-ஆம் நாள்)

2012-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 31-ஆம் தேதி (31.08.2012) வெள்ளிக் கிழமை காலை 11.00 மணிக்கு மாமன்ற கூட்ட அரங்கில் நடைபெற்ற மாமன்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்.

## கூட்ட நடவடிக்கைகள்

**1.** அரசாணை எண். 62 நிதி (உ.நி) நாள் 17.01.94-ன்படி, மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து 2011-2012ம் ஆண்டிற்கு அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய தணிக்கை கட்டணம் ரூ.15,72,239/- செலுத்துமாறு உதவி இயக்குநர் உடன்நிகழ் தணிக்கை, ஈரோடு அவர்களின் 26.03.2011ம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே 2011-2012ம் ஆண்டிற்கு அரசுக் கணக்கில் செலுத்தப்பட வேண்டிய தணிக்கை கட்டணம் ரூ.15,72,239/-ஐ செலுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியத்தை கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை செலுத்தியமைக்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**பி2/1745/12**

**172. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**2.** இம்மாநகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்படும் வழக்குகளை ஏற்று நடத்த நியமனம் செய்ய கோரி திரு. எம். ராஜா மதிவாணன் வழக்கறிஞர் சென்னை அவர்கள் விண்ணப்பித்துள்ளார்.

இதுவரை சென்னை உயர்நீதிமன்ற வழக்குகளை நடத்த வழக்கறிஞர்கள் யாரும் நியமனம் செய்யப்படவில்லை. திரு. எம். ராஜா மதிவாணன் அவர்கள் சென்னை வழக்கறிஞர்கள் சங்கத்தில் பதிவு செய்துள்ளார். பதிவு எண். 1535/2006 மாநகராட்சி விதிகளின்படி 5 ஆண்டுகள் வழக்கறிஞராக பணிபுரிந்து 55 வயதுக்குட்பட்டவராக உள்ளார். எனவே ஈரோடு மாநகராட்சி சார்பில் சென்னை உயர்நீதி மன்ற வழக்குகளை நடத்த திரு. எம். ராஜா மதிவாணன் அவர்களை நியமனம் செய்ய மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியத்தை முன்னிட்டு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று திரு. எம். ராஜா மதிவாணன் அவர்களை நியமனம் செய்வதற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**பி2/1097/12**

**173. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**3.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-4க்குட்பட்ட கச்சேரி வீதியில் 12 இன்ச் பி.வி.சி பிரதான குழாயில் உடைப்பு ஏற்பட்டது மற்றும் சென்னிமலை சாலையில் சவானா கார்டன் ஓட்டலின் அருகில் 8 இன்ச் ஏ.சி மெயினிலும் உடைப்பு ஏற்பட்டது. மேற்படி குடிநீர் பிரதான குழாய்களில் ஏற்பட்ட உடைப்பு குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்டது. எனவே குடிநீர் விநியோகத்தின் அவசர அவசியத்தை கருதி மேற்படி பழுதுகளை சீர் செய்ய ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு-15ன் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு மேற்படி பணிகளுக்கு பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விபரம் வருமாறு:-

1. திரு. வி. தாமோதரன், ஈரோடு - ரூ.40,948/-
2. திரு. ஏ. முனியப்பன், ஈரோடு - ரூ.41,176/-
3. திரு. பி. தங்கராஜ், ஈரோடு - ரூ.41,056/-

ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு-15ன் கீழ் இப்பணி மேற்கொள்வதால் மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் ரூ.40,948/- வழங்கிய திரு. வி. தாமோதரன் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி செய்து முடிக்கப்பட்டு அதற்கான தொகை ரூ. 40,948/- வழங்கியதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**இ2/1752/12**

**174. பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**4.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-4க்குட்பட்ட காவேரி சாலையில் காமாட்சியம்மன் கோயில் வீதி சந்திப்பில் 10 இன்ச் ஏ.சி. மெயினில் உடைப்பு ஏற்பட்டு குடிநீர் விரயமாகியது. இதனால் 59வது வார்டு பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்டது. எனவே குடிநீர் பணியின் அவசர அவசியத்தை கருதி மேற்படி குடிநீர் குழாய் உடைப்பை சீர் செய்ய ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு-15ன் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு பெறப்பட்ட விலைப்புள்ளிகள் விவரம் கீழ்வருமாறு-

1. திரு. வி. தாமோதரன், ஈரோடு - ரூ.21,762/-
2. திரு. ஏ. முனியப்பன், ஈரோடு - ரூ.21,780/-
3. திரு. பி. தங்கராஜ், ஈரோடு - ரூ.22,034/-

ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு-15ன் கீழ் இப்பணி மேற்கொள்வதால் மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் ரூ.21,762/- வழங்கிய திரு. வி. தாமோதரன் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டதையும், அதற்கான தொகை ரூ. 21,762/-ஐ மேற்படி ஒப்பந்ததாரருக்கு வழங்கியதையும் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**இ2/1711/12**

**175. பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**5.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-3க்குட்பட்ட முத்தம்பாளையம் வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு வெண்டிபாளையம் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து சுத்திகரிக்கப்படாத குடிநீர் பம்பிங் செய்யப்பட்டு முத்தம்பாளையம் 1 முதல் 4 மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. வெண்டிபாளையம் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள ஆழ்குழாய் கிணற்று நீர் அப்பகுதிகளுக்கு பம்பிங் செய்யப்பட்டு குடிநீர் விநியோகிக்கப்பட்டு வந்தது. தற்போது கோடை வறட்சியின் காரணமாக ஆழ்குழாய் கிணற்று நீர் மட்டம் குறைந்து விட்டதால் எனவே மேலும் உட்புற குழாய்கள் 2 இன்ச் ஜி.ஐ பைப் மற்றும் கேபிள்கள் இறக்கினால் இப்பகுதி குடிநீர் பற்றாக்குறையை போக்கலாம். எனவே இப்பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணியினை மேற்கொள்ள ஈரோடு மாநகராட்சி சட்டம்-15ன் கீழ் செய்ய உத்தேசிக்கப்பட்டு மேற்படி பணிகளுக்கு பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விவரம் வருமாறு-

1. திரு. வி. தாமோதரன், ஈரோடு - ரூ.49,600/-
2. திரு. ஏ. முனியப்பன், ஈரோடு - ரூ.49,800/-
3. திரு. பி. தங்கராஜ், ஈரோடு - ரூ.50,460/-

ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு-15ன் கீழ் இப்பணி மேற்கொள்வதால் மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் அளித்துள்ள ரூ.49,600/- வழங்கிய திரு. வி. தாமோதரன் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி

செய்து முடிக்கப்பட்டு அதற்கான தொகை ரூ.49,600/- வழங்கியதையம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**இ1/2208/12**

**176. பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**6.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்4-க்குட்பட்ட வெண்டிபாளையம் தலைமை நீரேற்று நிலையத்தில் சுத்திகரிக்கப்படாத கிணற்றில் உள்ள 50 எச்.பி நீர்மூழ்கி மின்மோட்டார் பழுது ஏற்பட்டுவிட்டது. எனவே குடிநீர் விநியோகத்தின் அவசர அவசியத்தை கருதி மேற்படி மோட்டாரின் பழுது நீக்கும் பணியை ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு-15ன் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு இப்பணிக்காக பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விபரம் கீழ் வருமாறு-

| | | |
|---|---|---|
| 1. திரு. ஆனந்தகுமார், ஒப்பந்ததாரர் | - | ரூ.49,470/- |
| 2. மெசர்ஸ் அபிராமி ரீவைண்டிங் ஒர்க்ஸ், ஈரோடு | - | ரூ.49,722/- |
| 3. மெசர்ஸ் பவர் ரீவைண்டிங் ஒர்க்ஸ், ஈரோடு | - | ரூ.49,850/- |

சட்டம் பிரிவு-15ன் கீழ் இப்பணி மேற்கொள்ளப்படுவதால் மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் வழங்கிய திரு. ஆனந்தகுமார் ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளி ரூ.49,470/-ஐ ஏற்று மேற்படி பணி செய்து முடிக்கப்பட்டு அதற்கான தொகை ரூ.49,470/-ஐ மேற்படி ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**இ2/1660/12**

**177. பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**7.** ஈரோடு மாநகராட்சியில் தற்பொழுது ஒரு நகர சார் ஆய்வாளரும் இரண்டு புல உதவியாளர்களும் நிரந்தர அடிப்படையிலும், ஒரு நகர சார் ஆய்வாளர் மற்றும் இரண்டு புல உதவியாளர்கள் அயற்பணியில் தற்காலிகமாக பணிபுரிந்து வருகிறார்கள். ஈரோடு மாநகராட்சி எல்லை விரிவாக்கம் செய்து 11 உள்ளாட்சி அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறது. எனவே தற்போது ஈரோடு மாநகராட்சியில் தற்காலிகமாக அயற்பணியில் பணிபுரிந்து வரும் ஒரு நகர சார் ஆய்வாளர் இரண்டு புல உதவியாளர்களை இம்மாநகராட்சியில் தொடர்ந்து பணிபுரிய அனுமதிக்கும்படி உதவி இயக்குநர் நில அளவை பதிவேடுகள் துறை ஈரோடு அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. நில அளவை உதவி இயக்குநர் அவர்களின் 11.07.12ந் தேதிய கடிதத்தில் ஈரோடு மாநகராட்சியில் பணி புரிந்து வரும் இரண்டு நகர சார் ஆய்வாளர்கள் மற்றும் நான்கு புல உதவியாளர்களுக்கு ஊதியம், விடுப்பு ஊதியம், ஓய்வு ஊதியம் வழங்குவதற்கு தேவையான பங்கு தொகையினை ஈரோடு மாநகராட்சியால் செலுத்தப்படும் என்பதற்கான தீர்மானம் நிறைவேற்றி அனுப்பும்படி தெரிவித்துள்ளார். மாமன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

ஈரோடு மாநகராட்சியில் இரண்டு நகர்சார் ஆய்வாளர்களும் நான்கு புலஉதவியாளர்களும் நிரந்தரமாக நியமிக்கவும், அதற்கான ஊதியம், ஓய்வு ஊதியம், விடுப்பு ஊதியம் ஆகியவைகளை வழங்குவதற்கான தேவையான பங்கு தொகையினை செலுத்த அரசுக்கு உறுதியளிக்கலாம்.

**எப்1/5495/09**

**178. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**8.** அரசாணை எண்.62 நிதி (உ.நி) நாள் 17.01.94ன்படி மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து 2010-11ம் ஆண்டிற்கு அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய தணிக்கை கட்டணம் ரூ.12,50,732/- செலுத்துமாறு உதவி இயக்குநர், உடனிகழ் தணிக்கை, ஈரோடு அவர்களின் 11.04.11ம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதின் பேரில் ரூ.12,50,732/-க்கு 30.06.11ம் தேதி மாமன்றத்தின் அனுமதி பெறப்பட்டது. உதவி இயக்குநர் உடன் நிகழ் தணிக்கை அவர்களின் 25.03.12ம் தேதிய கடிதத்தில் திருத்திய தணிக்கை கட்டணத்தில் கூடுதலாக ரூ.19,161/- செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே 2010-2011ம் ஆண்டிற்கு கூடுதல் தணிக்கை கட்டணம் ரூ. 19,161/-ஐ அரசுக் கணக்கில் செலுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

பி2/3194/11

**179. ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**9.** இம்மாநகராட்சி பொறியியல் பிரிவில் பணிபுரியும் திரு. பி. சிவக்குமார், திரு. என். சரவணன், திரு. ஆர். பழனிவேல், திரு. என். நாட்ராயன்சாமி, திரு. ஆர். ரிச்சர்டு மற்றும் திரு. ஆர். கிருபாகரன் ஆகியொர் பணி மூப்பு பட்டியல் தயார் செய்து அதன் அடிப்படையில் பதவி உயர்வு வழங்காமல் ஒருங்கிணைக்கப்பட்ட மாநகராட்சியில் பணியாற்றும் பணியாளர்களுக்கு இளநிலை பொறியாளர் பதவி வழங்கும்போது தங்களைவிட இளையவர்கள் மேற்படி பணிக்கு வருவதால் பதவி உயர்வு பாதிப்பதாக தெரிவித்து அதை தடை செய்யக்கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்கள். வழக்கு எண். டபிள்யூப்பி. 250066/11.

இதே போன்று பதவி உயர்வு தொடர்பாக இவர்களால் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த டபிள்யூப்பி. 18951-18953/11 வழக்கை சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் திரு. எம். தண்டபாணி அவர்கள் நடத்தி வருவதால் இந்த வழக்கிலும் எதிர்வழக்காடவும் திரு. எம். தண்டபாணி அட்வகேட் அவர்களுக்கு வக்காலத்து வழங்கலாம். இவ்வழக்கு தொடர்பான செலவினங்களை ஏற்கவும் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

பி2/645/12

**180. அனுமதி வழங்கப்பட்டது.**

**10.** இம்மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகளில் முதல் கட்டமாக கருங்கல்பாளையம் காவேரி ரோடு பெண்கள் மேநிலைப்பள்ளியில் பயிலும் 193 பேருக்கு ஆங்கிலப் பேச்சாற்றல் அளித்தல் பணிக்கு இம்மாமன்றம் தனது 30.07.12ம் தேதிய தீர்மானம் எண்.167-ல் உத்தேச செலவினம் ரூ.70,000/-க்கு அனுமதி வழங்கியுள்ளது. அதற்படி மேற்படி பணிக்கு 17.08.12ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு-

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | ஒரு மாணவருக்கு கட்டணம் ரூ. |
|---|---|---|
| 1. | சி.எஸ்.சி கம்ப்யூட்டர் எடிகேசன் | 345- |
| 2. | காம்பிரிட்ஜ் ஸ்போக்கன் அண்டு ஸ்கில்ஸ் டெவலப்மென்ட் அகாடமி | 349- |

இரு நிறுவனத்தாரும் ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகையினை மாநகராட்சிக் கருவூலத்தில் செலுத்தியுள்ளனர். வந்துள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகக் குறிப்பு-

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ரூ.345/-க்கு (ஒரு மாணவருக்கு) கொடுத்துள்ள மெசர்ஸ் சி.எஸ்.சி கம்ப்யூட்டர் எடிகேசன், ஈரோடு நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி உள்ளூர் சந்தை நிலவரத்திற்கு ஏற்புடையதாக இருப்பதால் அதனை மாமன்றம் ஏற்கலாம்.

இ1/3933/12

**181. ஒத்திவைக்கப்பட்டது.**

**11.** ஈரோடு மாநகராட்சி அண்ணாமலை வீதி வார்டு-ஈ, பிளாக்-16, டி.எஸ்.65,66, 68/2சி மற்றும் 68/3 முத்துகுமாரசாமி மனைப்பிரிவு (L.P./R/C.P.N) நெ. 39/87ல் அங்கீகரிக்கப்பட்டு மனைப்பிரிவில் உள்ள சாலைகள் ஈரோடு மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டு மாநகராட்சியால் தார்சாலை அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் உள்ள நகரளவு எண். 68/2சி4-ல் 905 ச.மீ பரப்புள்ள இடம் பூங்காவிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்படி இடத்தை மாநகராட்சிக்கு சம்பந்தப்பட்ட உரிமையாளர் ஒப்படைக்கவில்லை. ஒப்படை செய்யக்கோரி 18.5.2012ம் தேதி சம்பந்தப்பட்ட உரிமையாளர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது. ஆனால் இதுநாள் வரை ஒப்படை செய்யப்படவில்லை. சென்னை உயர்நீதி மன்ற W.P.No. 156/2000 மற்றும் 45/2003ன் வழக்கில் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் பொது வசதிகளுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்கள் யாவும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களில் குறிக்கப்பட்டுள்ள உபயோகங்களுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும் வேறு எந்த உபயோகத்திற்கும் பயன்படுத்தக் கூடாது என தீர்ப்புரை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப் பிரிவில் உள்ள பூங்கா இடத்தினை மாநகராட்சி வசம் எடுத்துக் கொள்வது சார்பாக திரு. எஸ். கனகசபாபதி வழக்கறிஞரின் சட்டக்கருத்து கோரப்பட்டதில் மேற்படி அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் உள்ள 905 சதுர மீட்டர் உள்ள பூங்கா உபயோகத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலத்தை ஈரோடு மாநகராட்சி பொது மக்கள் நலன் கருதி பொதுமக்கள் உபயோகத்திற்காக தன் வசம் எடுத்து பராமரித்து வரலாம் எனத் தெரிவித்துள்ளார். மேற்படி மனைப் பிரிவில் குடியிருக்கும் பொதுமக்கள் பூங்கா அமைத்துக் கொடுக்கும்படி கோரியுள்ளார்கள். எனவே மேற்படி மனைப் பிரிவில் பூங்காவிற்காக ஒதுக்கப்பட்டுள்ள 905 ச.மீ பரப்புள்ள இடத்தில் பூங்கா அமைக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. முத்துக்குமாரசாமி வீதி அங்கீகரிக்கப்பட்ட மனைப் பிரிவில் பூங்கா அமைக்கவும்,
2. வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை அரசாணை (பலவகை) 71 நாள் 21.03.2012ன்படி பூங்கா அமைக்க நகர் ஊரமைப்பு அபிவிருத்தி மான்யம் ரூ.10 லட்சம் பெறவும், கூடுதலாக ஆகும் செலவினை மாநகராட்சி நிதியில் ஈடு செய்து கொள்ளவும்,
3. வழக்கறிஞர்க்கு சட்டக் கருத்துரை வழங்கியதற்கான உரிய தொகை வழங்கவும் அனுமதிக்கலாம்.

**எப்1/3896/06**

**182. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**12.** ஈரோடு மாநகராட்சி, பெரியசேமூர் மண்டலம்-II பகுதிக்குட்பட்ட கங்காபுரம் பகுதியில் உள்ள தென்னை மர பலன் தரும் மரங்கள் குத்தகை உரிமத்தை 2012-2015-ம் ஆண்டிற்கு அனுபவிக்க இதுவரை நான்குமுறை ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொதுஏலம் விடப்பட்டதில், 29.08.2012 அன்று விடப்பட்ட பொது ஏலத்தில் திரு. S. பத்மராஜ், த/பெ. செல்வராஜ் என்பவர் ஒருவர் மட்டுமே கலந்து கொண்டு உச்ச ஏல கேள்வியாக ரூ.5000/-க்கு ஏலம் கோரியுள்ளார். மேற்படி விவரம் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மேற்படி குத்தகை இனம் இதுவரை நான்கு முறை ஏலம் விடப்பட்டுள்ளது. எனவே மேற்படி உச்ச ஏல கேள்வியை ஏற்பது குறித்து மாமன்றம் முடிவு செய்யலாம்.

**அ1/13600/09**

**183. நான்குமுறை ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் விடப்பட்டதில் திரு. எஸ். பத்மராஜ் த-பெ செல்வராஜ் என்பவர் மட்டுமே ஏலம் கோரியுள்ளதால் அவர் கோரியுள்ள உச்ச ஏலக் கேள்வித் தொகை ரூ.5000-ஐ ஏற்றுக் கொள்ள அனுமதி வழங்க தீர்மானிக்கப்பட்டது.**

**13.** ஈரோடு மாநகராட்சி பீளமேடு கிராமத்தில் உள்ள தென்னைமரம் மற்றும் பலன் தரும் பலவகை மரங்கள் 2012-2015-ம் ஆண்டிற்கு அனுபவிக்கும் உரிமத்திற்கு இதுவரை பத்துமுறை ஏலம் விடப்பட்டதில் 29.08.2012 அன்று நடைபெற்ற பொது ஏலத்தில் திரு K. தியானேஸ்வரன் த/பெ. M. கேசவன் என்பவர் ரூ.50,000/-க்கு உச்ச கேள்வியாக ஏலம் கோரியுள்ளார். மேற்படி விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மேற்படி குத்தகை இனம் பத்துமுறை எலம் விடப்பட்டுள்ளது. எனவே மேற்படி உச்ச ஏல கேள்வியை ஏற்பது குறித்து மாமன்றம் முடிவு செய்யலாம்.

**அ1/13600/09**

**184. பீளமேடு கிராமத்தில் உள்ள தென்னை மரம் மற்றும் பலன்தரும் பழவகை மரங்கள் 10 முறை ஏலம் விடப்பட்டதில் உச்ச கேள்வித் தொகை ரூ.50,000-க்கு கோரியுள்ள திரு. கே. தியானேஸ்வரன் த-பெ எம். கேசவன் என்பவரின் ஏலத்தொகையை ஏற்றுக் கொள்ள அனுமதி வழங்க தீர்மானிக்கப்பட்டது.**

**14.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட காசிபாளையம் பகுதிகள் அடங்கிய சிப்பம்-IV-க்கு பாதாள சாக்கடை அமைக்க மாமன்ற தீர்மானம் எண். 159, நாள்: 30.07.12-ல் அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையரக ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யும் குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் 22.08.2012-ல் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யும் குழுக் கூட்டத்தில் திருவாளர். AIPPL-SEW-JV, ஹைதராபாத் நிறுவனத்தாருக்கு ரூ.26,08,47,111/-க்கு (2008-09 ஆண்டின் நிர்வாக மதிப்பீட்டை விட 20.15% அதிகம். 2012-13 ஆண்டின் (SOR) மதிப்பீட்டை விட 6.56% குறைவு) பரிந்துரை செய்துள்ளதை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

சிப்பம்-IV-க்கு நகராட்சி நிர்வாக ஆணையரக 22.08.2012-ம் தேதிய ஒப்பந்தக்குழு பரிந்துரையின்படி திருவாளர். AIPPL-SEW-JV, ஹைதராபாத் என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்த விலைவிகிதம் 20.15% ஏற்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**பா.சா.தி/21927/06**

**185. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. 27ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. இராதாமணிபாரதி மற்றும் 54ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. ஜா. சபுராமாமின்ஹாஜ் ஆகியோர் ஆட்சேபனை செய்தார்கள்.**

## இடம்- ஈரோடு மேயர்,
## நாள்- 31.08.2012 ஈரோடு மாநகராட்சி